# ரத்த அழுத்தத்தை முழுமையாக குணப்படுத்த வாய்ப்பு உள்ளது

## கே.எம்.சி.எச்.டாக்டர் மங்களகுமார் விளக்கம்

**கோவை, பிப்.13:**ரத்த அழுத்தம், சிறு நீரக நோய்கள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு கே.எம்.சி.எச்.மருத்துவமனை சிறுநீரக சிகிச்சை சிறப்பு நிபுணர் டாக்டர் மங்களகுமார் அளித்த பதில்கள்:



டாக்டர் மங்களகுமார்

***அதிக இரத்த அழுத்தம் என்றால் என்ன? அதன் பக்க விளைவுகள் என்ன?**

பொதுவாக வயது வந்தோருக்கு இரத்த அழுத்தம் 140/90 mmHg மேல் இருந்தால் இது அதிகமான இரத்த அழுத்தத்தின் அறிகுறியாகும். அதிக இரத்த அழுத்தம் கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் நாளடைவில் இது சிறுநீரக பாதிப்பு, மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் இரத்த குழாய் அடைப்பிற்கு வழிவகுக்கும் .

***அதிக இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு காரணம் என்ன?**

95 சதவீத நோயாளிகளுக்கு அதிக இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான அடிப்படை காரணத்தை கண்டறிய முடியாது. இதற்கு 'பிரைமரி அல்லது எசன்ஸியல் ஹைபர் டென்சன்' என்று பெயர். மீதமுள்ள 5 சதவீத நோயாளிகளுக்கு வேறு ஏதாவது அடிப்படை காரணங்களால் அதிக இரத்த அழுத்தம் ஏற்படுகின்றது. இதற்கு 'செகண்டரி ஹைபர் டென்சன்' என்று பெயர்.

***எந்தெந்த அடிப்படை காரணங்களால் அதிக இரத்த அழுத்தம் ஏற்படலாம்?**

இரத்த நாளங்கள் பாதிப்பு, நாளமில்லா சுரப்பிகள் சார்ந்தது, சிறுநீரகப் பிரச்சனை சார்ந்தது, மருந்துகளின் பக்கவிளைவுகள் மற்றும் மரபணு சார்ந்த நோய்கள்.

***இரத்த அழுத்தத்தின் அடிப்படை காரணத்தை அறிவதின் அவசியம் என்ன?**

இரத்த அழுத்தத்திற்கு வாழ்நாள் முழுவதும் மருந்து உட்கொண்டால் மட்டுமே பின்விளைவுகள் ஏற்படாமல் பாதுகாக்க முடியும். அதாவது இரத்த அழுத்தத்தை குறைக்க முடியும். ஆனால் பரிபூரணமாக குணப்படுத்த முடியாது. ஆனால் சிலருக்கு இரத்த அழுத்தத்தின் அடிப்படை காரணத்தை கண்டறிந்து அதற்கேற்ப பரிசோதனை செய்து கொண்டால் 'இரத்த அழுத்தத்தை பரிபூரணமாக மருந்து இல்லாமல் குணப்படுத்த முடியும்'.

*** இரத்த நாளங்கள் பாதிப்பு எவ்வாறு அதிக இரத்த அழுத்தத்தை உண்டாக்குகிறது?**

சிறுநீரகத்திற்குச் செல்லும் இரத்தக் குழாயில் சுருக்கம் இருந்தாலோ அல்லது பெருநாடியில் (aorta) சுருக்கம் இருந்தாலோ இரத்த அழுத்தம் அதிகமாகும். பெரும்பாலான நோயாளிகளுக்கு இந்தக் குறை இருப்பது தெரியாது. சிலருக்கு நீண்ட தூரம் நடந்தால் கால் வலி ஏற்படலாம். மேற்கூறிய நோய்களை ஆஞ்சியோபிளாஸ்டி அல்லது அறுவை சிகிச்சை மூலம் சரி செய்தால் அதிக இரத்த அழுத்தத்தை முழுவதுமாக குணப்படுத்த வாய்ப்பு உள்ளது.

மேலும் விபரங்களுக்கு, சிறுநீரக சிகிச்சை சிறப்பு நிபுணர் டாக்டர் மங்களகுமார், கே.எம்.சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோயம்புத்தூர். போன் :+91 422-4323214, மொபைல்: +918973192919 இ-மெயில் :drmangalakumar@kmchhospitals.com ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

-Advt